

# திறவுகோல்

2054

ஐப்பசி

மாத இதழ்

வெளியீடு:

மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# வகுப்பறையில் பாடம் கற்பிக்கும் மாணவர்கள்
# (2. செ. நித்தீஷ் எனும் வாமனன்)

*நம்மை யாராவது ஒருவர் புகழ்ந்து பாராட்டினால் நாம் என்ன செய்வோம்? நன்றாக நினைவுகூர்ந்து சொல்லவும். அப்பாராட்டை புன்னகையுடன் பூரித்து புன்முறுவல் செய்து ஒன்று ஆமோதிப்போம். அல்லது அதனை ஒரு பொருட்டாக தலையில் சுமக்காமல் சிரித்துக்கொண்டே கடந்து போக முயற்சிப்போம். அவ்வளவுதான்!*

*ஆனால், செ. நித்தீஷ் அப்படியல்ல. ஏனெனில், இதே வகுப்பறையில் பா. நித்தீஷ் என்று ஒருவன் உள்ளான். அதனால்தான் முன்னொட்டு வைக்க வேண்டியதாயிற்று. அதுசரி. சொல்ல வந்ததை விட்டு விட்டேனே? ஆம். இவன் மாறாக கண்ணீரில் நம்மை நனைப்பான். வியப்பில்லை. உண்மை தான்!*

*ஆனந்தக் கண்ணீர் என்று சொல்வார்களே! அதேதான். இது. பாராட்டிய நாமும் மெல்ல உடைந்து விடுவோம். இவன் ஏனைய மாணவர்கள் போல் இல்லை. கற்றலில் குறைபாடு மிக்கவன். பிற மாணவர்கள் அனைவரும் படிப்பில் புலி என்று நினைப்பது பெரிய மூடத்தனம். அவர்களைக் காட்டிலும் இவன் படிப்பில் மிகவும் கடைநிலையில் இருப்பவன் என்றால் உங்களால் இப்போது ஓரளவிற்கு ஊகிக்க இயலும் என்று நம்புகிறேன்.*

*பள்ளி ஆவணங்களின்படி இவன் மாற்றுத் திறனாளி வகைப்பட்ட சிறப்பு கவனம் தேவைப்படும் மாணவர்களுள் ஒருவனாவான். மெல்லிய தேகம். நல்ல கோதுமை நிறம். எப்போதும் சிரிப்பு நிரம்பிய கூரிய முகம். கொஞ்சம் தாங்கித் தாங்கித் தான் நடந்து வரும் நடை. எண்ணும் எழுத்தும் சுழியம். இப்போதுதான் மெ...ல்...ல...மலர்ந்து கொண்டிருக்கும் (இதற்கே அதிக பிரயத்தனம் எடுக்க வேண்டியிருக்கிறது) சுட்டிப் பையன். என் அறிவுக்கு எட்டிய வரையில் கவனக் குவிவு குறைபாடு (Attention Deficit Disorder) அதிகம் அவனிடம் ஆளுமை செலுத்துவதாக நான் உணர்கிறேன்.*

*அதன் காரணமாகவே, யாரும் எதிர்பாராத விதமாக திடீர் என்று கத்தி அல்லது கூச்சலிட்டு அல்லது சத்தமாக எதையோ ஒன்றை நாராசமாகப் பாடி அனைவரையும் எரிச்சலும் வெறுப்பும் மேலோங்க உற்றுநோக்க செய்வதில் பலே கில்லாடி! சக மாணவர்கள் யாரையும் மட்டு மரியாதை இல்லாமல் அழைத்து அதற்காக வாங்கிக் கட்டிக் கொண்டாலும் விடாக் கொண்டன்.*

*அதேவேளையில், எங்கிருந்தோ சும்மா பொறுக்கி வரும் எலந்தை மற்றும் நாவல் பழங்களின் தூசு தட்டி நல்ல கல்லா கட்டும் பக்கா வியாபாரி. இந்த விஷயத்தில் இவனை*

யாரும் ஏமாற்ற முடியாது. ஆனால், இவன் பல பேரை ஏமாற்றி சொத்தையையும் தலையில் கட்டிவிடும் மகா கொள்ளையன்.

"சார்! இந்த அண்ணன் ஒரு ரூவாய்க்கு நேத்துப் பத்துக் கொடுத்துச்சு சார். இன்னைக்கு ஆறு தான் கொடுக்குது!" ஏமாற்றப்பட்ட பிஞ்சுக் குரல். நியாயம் தேடி.

நான் வாயைத் திறப்பதற்குள் நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து தாமாக முன்வந்து தம் தரப்பு நியாயத்தினை ஓர் அறுந்த வயலின் போல விட்டு விட்டு மழலையாய் மொழிவது கண்டு என்னால் எதுவும் சொல்ல முடியாது.

"ச்சார்!...நொம்ப கெடைக்கல ச்சார். ம்..ம்..அதான்!..."

அவனிடமிருந்து வார்த்தைகள் ஒவ்வொன்றாக சிறையிலிருந்து வெளிப்பட்டு நொண்டி அடிப்பதைக் கேட்கவே பாவமாக இருக்கும்.

"சரிடா! நாளைக்குச் சேர்த்துக் கொடுத்திடு!"

திருப்பதி உண்டியலில் போட்ட காசைக் கூட எப்படியோ கெஞ்சிக் கூத்தாடி வாங்கி விடலாம். அவனிடம் கொடுத்த காசைப் பெறமுடியாது என்று எனக்கு நன்றாகவே தெரியும். வலிய பிடுங்கினால் ஒப்பாரி வைத்து ஊரையே கூட்டி விடுவான் என்பது தனிக்கதை.

"ந்நாளைக்குத் தர்றேன் பாப்பா!" என்று சண்டைக்காரன் காலில் விழுந்து நம்மைக் கேட்காமலேயே சமாதானம் செய்து விடும் நல்ல சாமர்த்தியசாலி. ஆனால் தாம் சொல்லி உறுதியளித்தபடி ஒருபோதும் நடந்ததாக எனக்குத் தெரிந்து இல்லை.

"ஏண்டா படுபாவி. இன்னைக்குத் தான் நிறைய வச்சிருக்கியே அதுலேர்ந்து கொஞ்சம் கொடுத்தாதான் என்ன? நேத்து அவ்ளோ வீராப்பா பேசின."

ஒரு பச்சை சிரிப்பு மட்டும் சிரித்து வைப்பான். அதன் பொருள் என்னவென்றால், 'சார் முடிந்த கதையை மீண்டும் கிளறாதீர்கள்!' என்பதாகும். அவனிடம் காசு கொடுத்து வாங்கும் பிள்ளைகளும் கேட்பதாக இல்லை. அவனும் வியாபாரத்தைப் பள்ளிக்குள் விடுவதாயில்லை. நமக்கேன் வம்பு என்று ஒதுங்குவதுதான் நல்லது என்று நினைக்கத் தான் தோன்றும்.

ஆனால் ஒன்றை மட்டும் வகுப்பறையில் எல்லோரிடமும் திடமாகக் கூறுவேன்.
"இவனை எல்லாரும் எழுதப் படிக்கத் தெரியாத கூமுட்டை என்று இலேசில் எடை போட்டு விடாதீர்கள். இவன் ஒரு காலத்தில் இதே ஊரில் பக்கா வியாபாரி ஆகி ஊரையே விழுங்கி இருப்பான். எச்சரிக்கை!"

வகுப்பே புரிந்தும் புரியாமலும் விழித்துக் கொண்டிருக்க... அவன் திருட்டு முழி முழித்து நமுட்டுச் சிரிப்பை அடக்கிக் கொண்டிருப்பான். என்னைப் பார்த்து கொஞ்சம் நையாண்டியாக.

தம் துடுக்குத்தனமான பேச்சினாலும் யாரையும் கை ஓங்கி விடும் அடியினாலும் இவனையும் ஒரு மொத்து மொத்தி விடும் முரட்டு மாணவர்கள் வகுப்பில் ஒரு சிலருண்டு. அதுபோன்ற சமயங்களில் பள்ளியே கிடுகிடுக்க ஆந்தையாக அலறுவது கேட்க சகிக்காது. பாவமில்லையா என்று நீங்கள் உள்ளூர முணுமுணுப்பது எனக்குக் கேட்காமல் இல்லை. சும்மா கிடந்த சங்கை ஊதி கெடுத்த ஆண்டி போல இவனும் ஏதாவது அவர்களைச் சீண்டி வம்பிழுப்பதும் அதற்கு எதிர்வினையாக பலமாக வாங்கிக் கட்டிக் கொண்டு அழுது ஆர்ப்பாட்டம் நடத்துவதும் வாடிக்கையான ஒன்று. அவனிடம் முரட்டுத்தனமாக நடந்து கொண்டோரைக் கடிந்து, பதிலுக்கு ஓர் அடி தரச் சொல்லி ஆறாகப் பெருக்கெடுத்த நீலிக் கண்ணீருக்கு அணை போட்டால் தான் ஆச்சு. இல்லையென்றால் நம்மை விட மாட்டான். நசநசத்துக் கொண்டேயிருப்பான். ஐப்பசி அடைமழையாய்.

"பாவம்டா அவன்!..."
"சார் அவனா சார் பாவம்?..."
"அவன் அப்படித்தான்டா. ஒங்களுத்தான் நல்லாத் தெரியுமே?!..."

"சார்! அவன் எங்கப்பாவை மரியாதை இல்லாம கெட்ட வார்த்தையில...." நொறுங்கி அழுதான். செய்யாத தப்புக்கு என் மூலமாக தண்டனை அனுபவித்த மாணவன் ஒருவன். மனுநீதிச் சோழன் வாழ்ந்த மண்ணில் நான் நெறிபிறழ்ந்து நீதி வழங்கியதாக அவனது பார்வை என்னைத் தேர்க்காலில் போட்டு நசுக்கியது. நானோ செய்வதறியாது பாவமாகப் பார்த்ததை அவன் புரிந்து கொண்டான் போலும். இடத்தைக் காலி செய்தான். எனக்கும் இப்போதுதான் மூச்சு வந்தது.

"டேய்! நீ அவங்க அப்பாவை இழுத்துப் பேசியிருக்கக் கூடாது. அது ரொம்ப தப்பு! அவன் பக்கம் இனி நீ தலைவச்சுப் படுக்கக் கூடாது. என்ன புரிஞ்சுதா? போ!" கடுகடுத்த குரலில் அதட்ட பூனையாக தலையாட்டினான் நித்தீஷ். விரல் ஒன்று வாய்க்குள் எதையோ துலாவியபடி இருந்தது. அவனது மொத்த உடம்பும் கோணி சுவற்றில் பல்லியாக

ஒட்டிக்கொண்டு கிடந்தது. மூக்கில் வழிந்த சளியுடன் கண்களில் பொங்கிய கண்ணீர் கலந்து கன்றிப்போன முகம் பிசுபிசுக்க... உச்சந்தலையில் எச்சில் தொட்டு மண்டை ஓங்கிப் போட்ட நாலைந்து குட்டில் பிளந்துவிட்டதோ என்று அடிக்கடி ஆராய்ந்து கொண்டிருந்தது வேதனையாக இருந்தது.

இவனும் சாமானியபட்ட ஆளில்லை. ஆனாலும் இன்று வாங்கியது கொஞ்சம் அதிகம் போலும். நுணலும் இவனும் ஒன்று. இரண்டும் வாயால் கெட்டது. காது கூசும் கெட்ட கெட்ட வார்த்தைகளைக் கேட்டு எவன்தான் சும்மாயிருப்பான். இத்தனைக்கும் அடித்தவன் தான் இவனது குழுத் தலைவன். என் தொடர் நச்சரிப்பால் அவனால் தான் இவனும் கொஞ்சம் கொஞ்சம் எழுத்துகளை ஓரளவிற்கு அடையாளம் கண்டு சொல்லவும் மெல்ல எழுதவும் கற்றுக்கொண்டு வருவது வேடிக்கையானது.

இந்த சுமூகநிலை இனி இருவரிடையேயும் தொடருமா என்கிற கேள்விக்குறி எனக்குள் துளிர்த்தது. உண்மையில் நித்தீஷ் போன்ற துடுக்குத்தனமான மாணவர்களைச் சரிவர கையாளும் திறமையும் பொறுமையும் இப்போதுள்ள ஆசிரியர்களுக்கு இருப்பதில்லை. அத்தனைப் பணி நெருக்கடிகள். "சனியன் தொலைந்தால் போதும்!" என்று வகுப்பை விட்டு விரட்டி விடும் போக்கால் தான் அவனது குறும்புத்தனம் அதிகரித்துக் காணப்படுகிறது என்பதே உண்மை.

இதுபோன்ற மாணவருக்கு வட்டார அளவில் சிறப்பு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்ட போதிலும் ஆண்டுதோறும் இவர்களைத் திறம்படக் கையாளும் வழிமுறைகள் குறித்து ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சிகள் பல வழங்கப்பட்ட நிலையானது விழலுக்கு இரைத்த நீரேயாகும். என்ன செய்வது? பொதுநீரோட்டத்தில் கலந்து ஓட நித்தீஷ் போன்றவர்களால் ஒருபோதும் இயலாது.

அன்று பிற்பகல் சிறு இடைவேளை நேரத்தில் எல்லா வகுப்பு மாணவ, மாணவிகளும் விளையாட்டுத் திடலில் குழுமி ஏதோதோ விளையாடிக் கொண்டிருக்க...
என் கண்கள் நித்தீஷை மட்டும் துலாவின.

"எங்கடா உன் ஆள்?" அன்றைய மதிய உணவு இடைவேளையின் போது கண்டிக்கப்பட்ட குழுத் தலைவனை ஏறிட்டதில் அவனிடமிருந்து வெறுப்பாக வந்து விழுந்த பதில் இதுதான். "எனக்குத் தெரியாது சார்!"

தலைமுழுகியது போன்ற முனை முறிந்த பேச்சு. கேட்கவே அருவருப்பாக இருந்தது. இன்றுவரை சக ஆசிரியர்கள் மீது வன்மத்தோடும் வஞ்சகத்தோடும் முகத்தைத் திருப்பிக்

*கொண்டு திரியும் ஆ... சிறியோர் மத்தியில் இந்த பிஞ்சுக் குழந்தைக் காட்டுவது ஒன்றும் எனக்குப் பெரிதாகப் படவில்லை. வெறுமையுடன் புன்னகைத்தேன். அவனுக்கு என் முகத்தைப் பார்க்கவே பிடிக்கவில்லை போல.*

*முகத்தை உர்ரென்று வைத்துக்கொண்டு கவனத்தை வேறு திசையில் திருப்பி விட்டிருந்தான். எனக்கும் அவனது அந்த கோவத்தில் ஒருவித நியாயம் இருப்பதாகவே பட்டது. அதுவாக சரியாகட்டும் என்று நானும் அதுகுறித்துப் பேசுவதை விட்டு விட்டேன்.*

*கொஞ்ச நேரத்தில் எங்கிருந்தோ எதையோ தூக்கிக்கொண்டு வேகவேகமாகக் காலைத் தாங்கித் தூக்கிக்கொண்டு ஓடிவந்த நித்தீஷை கண்டதும் மனம் அமைதியடைந்தது. திடலில் விளையாட்டு புழுதி இப்போதும் பறந்து கொண்டிருந்தது. கூடவே கூச்சலும். ஓடிவந்தவன் சுற்றுச்சுவர் ஓரமாகக் கிடந்த ஒரு பெரிய கல்லில் கொண்டு வந்ததை இன்னொரு கல்லால் உடைத்துக் கொண்டிருந்தான்.*

"*டொக்...டொக்...!*" *அது வாதாம் மரத்தின் கொட்டை. அதன் உள்ளே இருக்கும் பருப்பு சுவை மிகுந்ததாக இருக்கும். கையில் பீட்ரூட் சாறு போன்ற திரவம் கசிய...*

"*யாருக்கு இது? எனக்கா?*" *வேண்டும் என்றே வம்பிழுத்தேன். அவனிடமிருந்து ஒன்றை பெறுவதென்பது அவ்வளவு எளிதல்ல. மகா கஞ்சன்.*

"*சொல்லுடா! எனக்குத்தானே?!*"

*பதிலே சொல்லவில்லை. வாதாம் பருப்பை ஒரு சேதாரமும் இல்லாமல் எடுக்க வேண்டும் என்கிற உத்வேகம் அவனுக்குள் சுடர் விட்டுக் கொண்டிருந்தது. எனக்கு அவன் பதிலளிக்காதது அவமானமாக இருந்தது. அதன் பின்னர் நானும் எதுவும் கேட்கவில்லை. நடக்கவிருக்கும் கூத்தை வேடிக்கைப் பார்ப்பது என்று முடிவெடுத்து அமைதியானேன். நித்தீஷ் முகத்தில் அப்படியொரு மகிழ்ச்சி. தாம் நினைத்தது போலவே முழுசாய் வாதாம் பருப்பு. இரண்டு இருந்தது. யாராவது வந்து பிடிங்கிக் கொள்ளப் போகிறார்கள் என்று பத்திரமாக உள்ளங்கையை அழுந்த பருப்பு உடையாமல் மூடிக்கொண்டு யாரையோ நோக்கி விரைவதை கண்சிமிட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தேன்.*

"*ஆளு, இந்தா ஆளு! ஒனக்குத்தான் எடுத்துக்கோ!*" *சிவந்த உள்ளங்கை மலர்த்த, இவனால் அடிபட்ட அந்தக் குழுத் தலைவன் முதலில் சற்று பிகு காட்டவும்,*

"*ஆஆஆளு ஒனக்குப் புடிச்ச வாதாம் பருப்பு ஆளு எடுத்துக்கோ!...*" *அந்தக் கள்ளம்*

கபடமில்லாதக் கெஞ்சலுக்கும் கொஞ்சலுக்கும் ஆட்பட்டு எல்லாவற்றையும் ஒரு நொடியில் மறந்தவனாக...

"ஐ! எனக்கு ரொம்ப பிடிச்ச வாதாம் பருப்பு! ஒனக்குடா?" என்று முகமலர கேட்டதும், "ஈஈஇது ஒனக்கு! இது எனக்கு!!" வாயில் ஒன்றை எடுத்து நித்தீஷ் ஊட்ட அவன் அதனை மெய்மறந்து வாயை அசைத்து சுவைத்துக் கொண்டிருந்தான்.

ஒரு விநாடி என்னை நானே யாருக்கும் தெரியாமல் வலிக்காத வண்ணம் கிள்ளிக் கொண்டேன். எனக்குள் கண்ணாடி மாளிகை போல் உயரக் கட்டி எழுப்பப்பட்ட பிறர் மீதான வன்மங்கள் சுக்குநூறாக உடைந்து நொறுங்கி வீழ்ந்து கொண்டிருந்தன...

வகுப்பு தொடரும்...

—

முனைவர் மணி கணேசன்

---

# முன்னவராய்...

அடுத்து
அந்த முன்னெடுப்பா
இந்த பணியா

நேற்றைய இழப்புக்கு
வருத்தமா

இன்றைய வெற்றிக்கு
உவகையா

நாளையவை பற்றிய
நம்பிக்கையா
பய பதற்றங்களா

இலக்குகள் பற்றிய
யோசனையா
என அங்குமிங்கும்
அலைபாய்ந்து கொண்டிருக்கும்
மனதை நெறிப்படுத்த

நமக்கானவர்களான
உறவுகளிடமும்
தோழமைகளிடமும்
ஆலோசனை தராளமாய்
கேட்கலாம்
ஆனால்
முன்னவராய்
வந்து
எதற்கு
முன்னுரிமை
எது
அவசர அவசியம்
பலத்தை கூட்டு
பலவீனத்தை கழி
நிதானமாய் இரு

என சொல்ல வேண்டியது
'தன்புத்தி'

மற்றும் சில

சுற்றி சுற்றி வருகின்ற
தீர்வு கிடக்கா
நெடு நேர சிக்கல்களுக்கு
புத்துணர்ச்சி பெற்று
யோசித்து தீர்வு காண

உடல் ஓய்வு
அதைப்பற்றிய
சிந்தனையில்லா
புத்தி ஓய்வு
தவிர்த்து

மற்றும் சில

தனக்கே தனக்கான
விஷயங்களில் ஈடுபாடு

உறவிடத்திலோ
நட்பிடத்தோ
பேச்சு

வெளியூலகம்
பார்த்தல்

தேடிப்பிடித்து...

அவசிய தேவைகளுக்கு
உதவி புரிய மறுக்கும்
மூளையின் ஞாபகச்செல்கள்

கோபம் ஏற்படும் சம்பவங்கள் நிகழும்
போது
‘பழைய இழப்புகளையும்’
தேடிப்பிடித்து
நினைவில் நிறுத்தி
'ஆவேச உணர்வுகளை
உச்சத்திற்கு
கொண்டு செல்கிறதே
அது ஏன்?

யார்?

கோபம் வந்தால்
கழுத்து நரம்புகள் புடைக்க கத்தும்
'மனித வழக்கத்தை'
சொல்லிக்கொடுத்து யார்
தன் எல்லைக்குள்
வந்து விட்ட
சக உயிரினத்தைப்பார்த்து
அலறும் நாய்க்கு...

சின்ன சின்ன...

நேற்றைய கனவுகளின்
தொடர்ச்சி
இன்றைய தூக்க இரவுகளில் தொடர

எதிர்பாரா
விருப்ப உணவு கிடைக்க

மனநிலைக்கு ஏற்ப
செவிகளுக்கு
திரைப்பாடல் கிடைக்க

நொந்த மனநிலையில்
முற்றிலுமாய் மாற்றும்
நகைச்சுவை பார்க்க

கஷ்ட துன்ப காலத்தில்
அறிவுரைகள் இல்லா
ஆறுதலும் நம்பிக்கையும்
கிடைக்க

சந்தோஷோமோ
ஆச்சார்யமோ
கஷ்டமோ
விவரிக்கையில்
எதிர்மனிதர்
கேள்விகள் தவிர்த்து
அமைதியாய் அந்த கணத்து
உணர்வுகளை
உள்வாங்க

சின்ன சின்ன
ஆசை...

பெரும்பாலும்...

கேட்கமாலேயே
செய்யும் உதவிக்கும்

சொல்லாமலேயே
முடிக்கின்ற பணிக்கும்

தானாக முன் வந்து
பேசும் பேச்சுக்கும்

உடல் மொழி
பார்த்து சொல்லும் ஆறுதலுக்கும்

சூழ்நிலை கருதி
கொட்டப்படும்
அமில வார்த்தைகளுக்கு
காட்டப்படும் அமைதிக்கும்

சொல்லப்படாத
அறிந்த வெற்றிக்கு
வழங்கப்படும்
பாராட்டுக்கும்

பின் விளைவுகள்
அறிந்து
யோசனையிலும்
செயல்பாட்டிலும்
காட்டும்
நிதானத்துக்கும்

தாமாக முன் வந்து
விட்டுக்கொடுக்கும்
மனப்பக்குவத்துக்கும்

பெரும்பாலும்
அங்கீகாரம்
கிடைப்பதில்லை

கொஞ்சம் பேர்

தன்னுடையது
நிறைவான வாழ்க்கை
என்று சொல்பவர்கள்

தகுதியற்ற புகழ்ச்சிக்கு
மறுப்பவர்கள்

செய்ய இயலாத காரியத்திற்கு
மறுப்பவர்கள்

தெரியாதை
தெரியாது
என சொல்பவர்கள்

இல்லாதவற்றுக்கு மட்டும்
ஏங்கி
இருப்பதை அனுபவிப்பவர்கள்

பிறருக்கான
பாராட்டு தனக்காகும் போது
ஏற்காதவர்கள்

மற்றும் சில

சுற்றி சுற்றி வருகின்ற
தீர்வு கிடக்கா
நெடு நேர சிக்கல்களுக்கு
புத்துணர்ச்சி பெற்று
யோசித்து தீர்வு காண

உடல் ஒய்வு
அதைப்பற்றிய
சிந்தனையில்லா

புத்தி ஒய்வு
தவிர்த்து



மற்றும் சில

தனக்கே தனக்கான
விஷயங்களில் ஈடுபாடு

உறவிடத்திலோ
நட்பிடத்தோ
பேச்சு

வெளியூலகம்
பார்த்தல்

— A.S. சுந்தரராஜன்,
மானாமதுரை,
தொடர்பு இலக்கம்: 9994920236

---

# அவள் கற்பனை களம்

யார் அவள் / யாரோ அவள் ....
என்னை மறந்த நொடிகளில் ...
கார் மேகங்களுக்கிடையே களவு போன
கயவன் ...
நானே ...
காற்று பிம்பத்தில் விழி மறந்த குருடனும்
நானே ...
அவள் பிறையின் ஒவ்வாமையில்
பித்தனும் நானே ...
அவள் வாடை மோகத்தில் வளவனும்
நானே..
அவள் குடை பூஞ்சுடரில் குயவனும்
நானே ...
அவள் இதழ் அறையில் மூழ்கிப்போன
முதல்வனும் நானே ..

அவள் சங்கு குழல் சங்க கால சங்கமும்
நானே..
அவள் மின்னல் நடை வேகத்தில்
வேந்தனும் நானே ...
அவள் கரங்களின் கற்பனையில் கந்தனும்
நானே ...
அவள் கண்களின் காப்பாளனும் நானே..
அவள் குருதியின் தொடரில்
தொலைந்தவனும் நானே ...

அவள் மோகத்திர்க்கும் தாகத்திற்கும்
மருந்தும் நானே..

அவள் ஏக்கத்தை எண்ணிய நேரத்தில்
தீர்க்கும் எய்துபவனும் நானே ...
அவள் கனவிலும் கற்பனையிலும்
கணவனும் நானே ..
அவள் உடல் மொழி அனைத்திலும்
உழவனும் நானே ...
அவள் நீர் சுனையில் மூழ்கி தவிக்கும்
மூடனும் நானே ..
அவள் முத்தத்தில் மிஞ்சம் சத்தமும்
நானே ...
அவள் சம்மதத்தில் நான் நித்தமும் நானே
...
அவள் தாகத்தில் தத்துவனும் நானே ...
அவள் துயரத்திலும் துன்பத்திலும் தூது
காப்பாளனும் நானே ...
உன் அங்கமும் சங்கமும் அழகு
மங்கலமும் நானே ...
அவள் மொட்டு மன மலரில்
மணவாளனும் நானே ...

அவள் காதல் முதல் மோதலில்
முத்திரையும் நானே ...
அவள் அன்பின் ஆக்கத்தில் அடியவனும்
நானே ...
அவளை வர்ணித்து வர்ணித்து என்
வரிகளும் வலுவிழந்தது அந் நொடி ...
அவள் கூந்தல் கற்பனையில் களவு போன
நொடியில்......

--

கவிஞர் மெய்யெழுத்தன்,
(ம.செல்லமுத்து, எம் ஏ., பி எட்.)
நூத்தப்பூர் அஞ்சல்,
பெரம்பலூர் மாவட்டம்.

---

# மனதின் குரல்

மகள்
ஆசையாகக் கேட்டவுடன்
கப்பலாகவும்
கத்திக்கப்பலாகவும்
நீர்மூழ்கிக் கப்பலாகவும்
பறக்கும் கப்பலாகவும்
உருமாறுகின்றன
காகிதங்கள்
கடலில்
வெள்ளோட்டம் விட
பெருமழை நோக்கி
அண்ணாந்து
பார்க்கையில்
முகத்தைத் தழுவுகின்றன
மழைத் துளிகள்
கண்ணடித்து சிரிக்கிறது
வானம்

----------------

பேசுவதற்கு நிறைய உள்ளது
கேட்பதற்கு யாரும் இல்லை
முதியோர் இல்லம்

----------------

## மௌனமொழி

இதயத்தின் மௌனத்திலிருந்து
இதழ்கள் கதவடைக்க

விழிகள் பேசிக் கொள்கின்றன
முரண்களநிலவரம் கண்டு
இருமுகங்களை
மாறி மாறி நோக்கியதில்
கழுத்து சுளுக்கிக் கொண்டது
மொழிக்கு
கழுத்தை தடவியவாறு
மெல்ல அவ்விடத்தை
விட்டகன்றது
முணுமுணுத்தவாறு

---------------

## புன்னகை

அலைபேசிகளில்
ஆக்ரமித்துள்ளன
முகங்களில்
தொலைந்து போன
புன்னகை
எமோஜிக்கள்

---------------

## இலக்கு

இலக்குகள்
தீர்மானிக்கின்றன
வாழ்க்கை பயணத்தை
நத்தைக்கு
சாலையைக் கடத்தலும்
பசியோடிருக்கும்
ஏழைக்கு பசியின்றி
நாளைக் கடத்தலும்
பெரும் இலக்கு

---------------

## அலைவரிசை

கடற்கரையில்
பாதச்சுவடுகளால்
தொடர்கோலமிட்டுச்
செல்கிறாள் குட்டிதேவதை
பாதத்தை தழுவிட
வந்த ஆசையலைகள்
கோலத்தை கலைக்க
மனமின்றி
திரும்பிச் செல்கின்றன
ஏக்கத்துடன்

அலைவரிசையறிந்த
சிறுமி
ஓடிச் சென்று
கால் நனைக்கிறாள்
மகிழ்ச்சியில்
ஆர்ப்பரிக்கிறது அலை

---------------

## நகரத்தில் மழை

மழை தொடங்குகிறது
பரபரப்பாகிறது நகரசாலை
விரித்து வைத்த
குடையொன்று
காற்றில் நகர்ந்து
சாலையில் இறங்கி
மழையில் நனைகிறது
ஓடி வந்து குடையை
எடுத்துக் கொண்டு
ஓடுகிறார் ஒருவர்
மழையை இரசிக்காது
மனக்குடையை
விரித்தபடி
ஒதுங்கி நிற்கின்றனர்

மடைமக்கள்
அதிகோபத்தில்
அதிர்கிறது மழை
இடி என காதைப்
பொத்திக் கொள்கிறார்கள்



— பா. சிவகுமார்,
Y17, ராஜ் பவன், சென்னை 600 022.
அலைபேசி: 9003034340

---

# பாதையின் நடுவில் வருபவர்

முடியாது என்று நீங்கள் நினைத்தால்
அது உங்களால் முடியாததாகவே
இருக்கலாம்
உங்கள் எண்ணத்தின் அளவு அவ்வளவு
நீங்கள் நினைத்ததை மறுக்காதீர்கள்...
உங்கள் நம்பிக்கையின் அளவு குறைவு
உங்கள் குறுகிய எண்ணத்தால்
லட்சிய பாதையில் செல்லும் மனிதனின்
நல்பாதையில் குறுக்கீடு செய்யாதீர்கள்..
கனவோடு இருக்கும் மனிதனிடம்
உன்னால் முடியாது என்றும்
நீயெல்லாம் இதற்கு ஆசைப்படுகிறாய்...
நீ இதற்கு தகுதியே கிடையாது என்றும்
விஷம் தடவிய வார்த்தையை கூறி
மனம் நோகும்படி செய்யாதீர்கள்...
உங்களால் முடியாது என்றால்
உங்கள் எதிர்மறை எண்ணத்தின்படி
உங்களால் முடியாததாகவே
இருக்கட்டும்...
அதற்காக அவன் லட்சியத்தின்
ஆணிவேரை பிடித்து இழுக்க
முயலாதீர்கள்...
பின் நீங்கள் புதைக்குழியில் புதைந்து
முடியாது என்று மனதளவில் மடிந்து
போவீர்கள்...

—
க. பூமணி,
சென்னை.

---

# வெற்றி தோல்வி (ஜென் கதை)

பல வெற்றிகளைக் கண்ட பிரபல விளையாட்டு வீரர் ஒருவர் சிறப்பாக பயிற்சி மேற்கொண்டு சர்வதேசப் போட்டியில் தனது பயிற்சியாளருடன் கலந்து கொள்ள புறப்பட்டுச் சென்றார். பிறந்த மண்ணிற்கும், தாய் நாட்டிற்கும் வெற்றிக் கோப்பையோடு வந்து பெருமை சேர்க்க வேண்டும் என்று பேராவலோடு விளையாடத் தொடங்கினார். ஆனால் முதல் சுற்று போட்டியிலே தோற்றுப் போனார்.

அவர் தொடர்வண்டியில் மிகுந்த

மனக்கவலையோடு சொந்தம் ஊருக்கு திரும்பிக்கொண்டு இருந்தார்.

எதிரில் அமர்ந்து இருந்த துறவி ஒருவர் 'நீ ஏன் சோகமாக இருக்கிறாய்' என்று கேட்டதும் அவர் நடந்ததை எல்லாம் விளக்கமாகச் சொன்னார். அதற்கு அந்தத் துறவியோ சிரித்துக் கொண்டே இதற்கு தான் நீ இவ்வளவு வருந்துகிறாயா? என்று கேட்டார். உடனே வீரன் 'நீங்களும் இதே போல் தோற்று இருந்தால் துளி அளவும் வருத்தம் இல்லாமல் இப்படி தான் சிரித்துக் கொண்டு இருப்பீர்களா' என்று கோபத்தோடு கேட்டார்.

ஆம் என்று சொன்னார் துறவி.ஏற்கனவே முடிந்து போன ஒன்றிற்கு நான் கவலைபட்டு என்ன நடக்கப்போகிறது என்றார். அதற்குள் துறவி இறங்க வேண்டிய ரயில்நிலையமும் வந்து விட்டது.

"ஒவ்வொரு மரத்திற்கும்
இலையுதிர்காலமும் உண்டு
வசந்தகாலமும் உண்டு
அதே மௌனத்தில் மரம்"

என்று அவருடன் படிக்கட்டு வரை சென்ற வீரனிடம் சொன்னார்.

'நீயும் மரமாய் இரு' என்று சொல்லி அவரின் மனக்கவலையை இறக்கி வைத்து தொடர்வண்டியில் இருந்து இறங்கினார் பெயர் சொல்ல மறுத்த துறவி.

—

ஸ்ரீவி. முத்துவேல்,
துபாய்.

---

## 1) காணாமல் போனவர்கள்

அடுத்தடுத்த
அடிகளுக்கு இடையே
அப்பாவின் ஆசை
முடிந்துவிடுகிறது
இன்றும்
கசங்கியே உள்ளது
முதல் ஊதிய சட்டையொன்று....

கிழிந்த சீலையில்
முகம் துடைத்திடும்
அம்மாவிற்கு
கண்படாமல் இருக்கும்
அவளுக்கவளே
துடைத்து ஒட்டுக்கொண்ட
கண் திருஸ்டி மையினால்.....

வயதாகிப்போனவளுக்கு
முதிர் கன்னி
எனக்கூறி
முழுவதுமாக அடர்ந்த படர்கிறது
பொன் இல்லாத
பெண் இல்லம்....

திரும்பி வரும் பொழுதெல்லாம்
அம்மாவுக்கு சீலை
அக்காவுக்கு சுடிதார்
அப்பாவிற்கு கடன் துடைக்க பணமென
கொண்டு வரும் மகனுக்கு
துணையொன்று
வேண்டுமென
தொன்றுவதற்குள்ளே
முடிந்துவிடுகிறது
புதுமனை புகுவிழாவும்
தங்கைக்கும் அக்காவுக்கும் திருமணம்...

## 2) திரும்பி பார்க்காதவன்

நேற்று வந்தவன்
ஒன்று சொல்லிப் போனான்
இன்று வந்தவன்
அவனை மிஞ்சிப் போனான்
இருவரும் நேரில் வர
வருக வருகவென
புன்னகைத்து பின்
மறைந்துவிடுகிறது
முதுகிற்கு பின் சொன்ன
கதைகளெல்லாம்
மீண்டும் தொடங்க தயாராகிறது
புன்னகையில் மிஞ்சிய மீத
கதைகளெல்லாம்....

## 3) அப்பாவாகிய விரல்

ரேகைகளை வளைத்து
உழைப்பை ஏந்தி சென்ற
கைகளின் நிழலுக்கு
அப்பாவின் சாயல்

## 4) துளித்தீ

சிரிப்பவனையும்
அழுபவனையும்
விழி மாறாமல்
பார்த்துக் கொண்டிருக்கும்
கல்லிற்கு
கடவுளென பெயரிடுகிறான்
அவனைமீறி
சுட்டுவிடுகிறது
வேண்டுதலில் நிறைவேறாத
விடயத்தை
உள்ளங்கையில் கரைய செய்திடும்
தீயொன்று...!

## 5) சொல்வண்ணம்

என்னிடம்
ஒரு வண்ணம்தான் உள்ளது
மொத்த வண்ணத்தையும்
கையேந்தும் பொழுது
வானம் கைக்குழந்தையாய்
தேம்புகிறது..
மழை கண்ணீராய்...

## 6) நிழலுக்குள் யாரோ

யாருக்கு வானம் வேண்டும்
யாருக்கு பூமி வேண்டும்
சிறு புகை போர்த்திய
ஆறாம் விரல் தேடிய
கைகளுக்கும்
நிழல் பிடித்து தின்றிடும்
கண்களுக்கும்
சதை நகர்த்திய கழிவு பார்வை
போதுமானதாகிறது
பஞ்சம் போர்த்திடும்
மனிதயினத்திற்கு...

## 7) இன்னொருவன்

உனக்கு நன்றாகவே
தெரிந்திருக்கும்
அவனை
இல்லாவிடில்
யாரேனும் கூறியிருப்பர்
மூக்குப் புடைக்க கோவமுறும்
நேரத்தில்
சிரித்து செல்பவர் பலரில்
அவனிருக்கலாம்
இருப்பினும்
நீங்காமல் தேடத் தயாராகிவிடு
உனக்கு நன்றாகவே தெரிந்த
நீயாகிப் போன அவனை...!

## 8) முருங்கை மனம்

ஒரு பெருமழையை
தேடுகிறது
காடு
ஆங்கே
முருங்கை மரத்தில் அமர்வனும்
கற்களை எடுத்தெறுபவனும்
கடந்துக் கொண்டே
இருக்கிறான்
ஆனால்
முறிந்துக் கொண்டேயிருக்கிறது
முருங்கை சுமந்த மனங்கள்

## 9) நனைந்துக்கொள் நேரமில்லை

யாரும் அச்சம் கொண்டு
அந்த மரத்தின் கீழ்
நின்றுவிடப் போவதில்லை
ஒரு துளியைக் கண்டு
பயந்து விடும்
சாமான்ய யதார்த்த
கொண்டிருக்கும்
யாரும் திணிக்கப்படவில்லை
பொறுமையுடன் எட்டிப்பாருங்கள்
யாரெல்லாம்
மழையில் நனைகின்றார்
குடையுடன் நடக்கின்றார்
ஆற்றிவில் நகர்கின்றார்
ஐந்தறிவுடன் நடைபோடுகின்றார்

ஒரு நொடியேனும்
பயணத்தில்
மழை பொழிந்து
விடலாம்
அதனால் முளைத்த
ஆசைகளுக்கு
புது வனமென நிலையிட்டு
நகரலாம்
இப்பொழுது தொடர்கிறது
வனத்தின் மீதான பருவ மழை...

நீ
இட்டவிதைதான்
இப்போது வனமாகிறது
நீயும்
நனைந்துக் கொள்
நேரமில்லை....

## 10) வாழ்பரிணாமம்

ஒரு மரம் தேடி
வந்தவனுக்கு ஒரு கனி
சிறு விதை கொண்டு
வந்தவனுக்கு

சிறு நிழல்
நீர் தேடி வந்தவனுக்கு நீள் நதி
அன்பைத்தேடி வந்தவனுக்கு
வாழ்வே பொய்....

பழமோ
விதையோ
ஊன்றி நின்ற மரத்தின்
உள்ளேயும் வெளியேயும்
காற்றின் ஓர் பரிணாமம்...

ஊறிய மரவட்டைக்கும்
ஊர்ந்த அணிலுக்கும்
விரயமாகிறது
அடுத்ததோர் நொடிகள்...

—



கவிஞர். சே கார்கவி,
நாகப்பட்டினம்.
(Er. Prof. சே கார்த்திகேயன். ME)
SWD. Chennai

---

## என்னிடம் பேசுவதற்கு

என்னிடம் பேசாமலிருப்பதற்கு
என்னிடம் சண்டை போடுவதற்கு
என்னிடம் சமாதானம் செய்வதற்கு,
என்னை அழவைப்பதற்கு
எனக்கு ஆறுதல் சொல்வதற்கு,
என்னிடம் நெருங்கி வருவதற்கு
என்னிடமிருந்து பிரிந்து போவதற்கு,
என்னைப் பற்றி எழுதுவதற்கு
என்னைப் பற்றிய நினைவுகளை அழிக்க
நினைப்பதற்கென

எல்லாவற்றிருக்கும் ஒரு காரணம்
வைத்திருக்கிறாய்...
காரணங்களையெல்லாம் அழகழகாய்
ஜோடித்தாலும்
ஒன்றும் அழகாய் இருந்ததில்லை ...
உன்னைப் போல்!

—

மு. முபாரக்.
திருச்சி.



---

## மழையில் நனைந்து

குதித்து விளையாடுகிறாள்
மகள்.
மகளை நனைத்த மகிழ்ச்சியில்
துள்ளி குதிக்கிறது
மழை.

/
வண்ணவிளக்குகளின்
அலங்கார ஒப்பனையில்
மணப்பெண்ணாய் ஜொலிக்கிறது
சுபமுகூர்த்த நாட்களில்
திருமண மண்டபங்கள்.

/
கர்வம் ஒழி.
களங்கமற்ற
இதயங்கொள்.
யாரிடத்திலும்

வேண்டாம் பகை.
தீய எண்ணங்களை
அடியோடு விரட்டு.
எதற்கு வீம்பு
விட்டுக்கொடு.
சுற்றமும் நட்பும்
கூடி வாழ்.
மனதில்
நல்லவைகளை
ஆழமாக விதை.
பேரன்பை
அறுவடை செய்.
மனிதம் காத்து நில்.

/
பிஞ்சுக்கரங்களில்
தம் கபடமற்ற பார்வையை
மூடி மறைக்கும்
அந்தச் சில கணங்களில்
தொடங்கிவிடுகிறது.
பிள்ளைகளுக்கும் கடவுளுக்கும்
இடையேயான
கண்ணாமூச்சி விளையாட்டு

/
சில மழைத்துளிகள்
விழுந்ததில்
அம்மைத் தழும்பு வாங்கிய
அலுமினியப் பாத்திரமாகிறது
தரை...!

— பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம்.
கைப்பேசி: 9443139353



# எறும்பு

வரையறுக்கப்பட்ட சாலை விதிகளில் பயணிக்கும் வாகனங்கள் போலவே, இடம் விட்டு இடம் மாறும் எறும்பின் வரிசை ஒன்றைக் கண்டேன்.

கடந்துச் செல்லும் எறும்புகள் பல இருக்க, என்ன ஆச்சரியம்...! எதிர்த்து வரும் சில எறும்புகள் ஒவ்வொரு எறும்பிற்கும் ஏதோ ஒரு தகவலைச் சொல்லிக்கொண்டே தான் செல்கின்றது.

எறும்பின் பாசை தெரியவில்லையே என்று வருத்தம் தான் எனக்கு. ஏனெனில் அதன் குறைகளை நான் நிவர்த்தி செய்ய இயலவில்லை என்றாலும் அதன் நிறைகள் எனக்கு பாடமாக அமையும் அல்லவா...!

—
வாழ்வியல் கவி,
(சா. நாகூர் பிச்சை)
திண்டுக்கல்.



# உங்களை எங்கே நிரூபிக்க வேண்டும்!

மனிதர்கள் பெரும்பாலும் தம்மை எல்லா இடங்களிலும் நிரூபிக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள், அதற்கான முயற்சியில் இறங்குகிறார்கள், அதன் காரணமாக அவர்களின் சக்தி வீணாகி நிரூபிக்க வேண்டிய இடத்தில் தன்னை நிரூபிக்க முடியாது தடுமாறும் நிலை உருவாகிறது.

ஒரு ஊரில் நாய்களுக்கும் சிறுத்தைக்கும் ஓட்டப்பந்தயம் நடந்தது. பத்து நாய்களும் ஒரு சிறுத்தையும் வரிசையில் நின்றன. போட்டி துவங்க விசில் அடித்ததும், நாய்கள் அனைத்தும் ஓடின, சிறுத்தை ஓடவில்லை. "நீ ஏன் ஓடவில்லை?" என்று சிறுத்தையிடம் கேட்க, அதற்கு சிறுத்தை சொன்னதாம் "நாய்களுடன் ஓடி என் திறமையை நான் நிரூபிக்க வேண்டியதில்லை, சக சிறுத்தைகளுடன் வேட்டையின் போது என்னை நிரூபிப்பேன்".

ஆமாம் நிறைய நேரங்களில் உங்களுக்கு இணையாக இல்லாதவர்களிடம் உங்களை நிரூபிக்க முயன்று உங்கள் திறமையை, பெருமையை குறைத் துக்கொள்கிறீர்கள், உங்கள் பணி, உங்கள் தொழில், உங்கள் குடும்பம் என எங்கு நீங்கள் யார் என்பது நிரூபிக்கப்பட்டால் அது போதும். மேலும் உங்களது போட்டியாளர் எப்போதும் உங்கள் திறமைக்கு இணையாக அல்லது கூடுதலாக இருக்க வேண்டும், அப்போதுதான் வென்றாலும், தோற்றாலும் புகழ் குறையாது.

சமீபத்தில் நடந்த உலக கோப்பை சதுரங்க சாம்பியன்ஷிப் இறுதி போட்டியில் தமிழ் நாடு வீரர் பிரக்ஞானந்தா உலகின் முதல் நிலை வீரரான கார்ல்சனை எதிர்கொண்டார். இறுதி போட்டியில் கார்ல்சனை வீழ்த்தி சாதனை படைப்பாரா? என்று ஒட்டுமொத்த இந்தியாவே ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. ஆனாலும் தன் கடின முயற்சியால் இரண்டு முறை சமன் செய்து, கடைசியில் டை பிரேக்கர் முறையில் கார்ல்சன் வெற்றி பெற்றாலும், இறுதிவரை ஒரு உலகின் தலைசிறந்த வெற்றியாளரை எதிர்த்து, திணறடித்து தன் திறமையை நிரூபித்த பிரக்ஞானந்தா உலக நாடுகளால் பாராட்டப்பட்டார்.

எனவே நாய்களோடு ஓடாதீர்கள், வேட்டைக்காக காத்திருங்கள். உங்களை நிரூபிக்க முடியும்.

- முனைவர். சா.சம்பத்,
தேசிய பயிற்சியாளர்.



# பஞ்சபூதங்களில் நிறையும் வாழ்வு...

*உயிரின் மூச்சை வளர்த்திடும் வளியில்
உடலும் விளைந்தே உற்சாகம் கூட்டும்
உணவின் தன்மையில் உணர்வினைக்
கூட்டியும்*

*உலகின் நகர்வில் வெளிச்சம் நீட்டியும்
அனலாய் மாறும் நெருப்பின் நெருக்கம்
அகிலமென உயர்ந்து உயிரைத்
தாங்கியும்
மண்ணையும் பொன்னாக்கி மகத்துவம்
காட்டியும்*

*தன்னையே ஒப்படைத்து தரணியில்
நிலைத்திடும்
நிலத்தின் பொறுமையில் நெஞ்சம்
மகிழும்*

*நாகரிகம் விதைத்து நலமுடன் நிமிர
நீரென ஊறும் அமுதத்தின் வரத்தில்
உயிரும் பயிரும் ஒன்றாய் விளையும்
ஆகாயமென விரிந்து ஆனந்தம் நீட்டி
வானத்தை அளந்திட வழிகளைக் காட்டி
மனிதனுக்குள்ளும் பூதங்களாய் ஒடுங்கி
வாழும்*

*இயற்கையின் வனப்பில் இதயம்
நிறைப்போம்.*

***1***

*வனம் அதிர பிளிரும்
யானையின் கோலிக்குண்டு
கண்களுக்குள்
பளபளக்கிறது
ஆசி வாங்க வரிசையில் நிற்கும்
சிறுமியின் கையில் ஒற்றை நாணயம்.*

***2***

*சும்மா இருக்கும் காற்று
ஊஞ்சலாடும் கிளையில்
உட்காரும் பறவையைக் கண்டதும்
வானுக்கும் பூமிக்குமென
உற்சாகத்தில் தூது போகிறது.
காற்றுதானே என
கண்டும் காணாமல் இருந்த
பறவையின் சிறகுக்குள்
நிரம்பி எழுகிறது வளி.
கிளைக்கும் வானுக்குமென
பறக்கும் சாகசத்தில் பரிதவிக்கிறது
கூடு காண வந்த பறவை.*

***3***

*பக்கத்து வீட்டுடன்
பல நாள் பகை
பார்க்கும்போதெல்லாம்
பற்றிக் கொள்கிறது
கண்ணில் வன்மம்.
சொல்ல முடியாத எண்ணங்களுக்குள்
நீளும் பொழுதுகளில்
என்னதான் செய்வது
சுவர் தாண்டும் பூனையை.*

***4***

*கருணையைப் பிடுங்கிக் கொண்ட
வேக யுகத்தில்
நிதானத்தை உடைத்துவிட்ட
குரூர நகர்வில்
பரிதவிப்பைப் புறந்தள்ளிய*

அவசர ஓட்டத்தில்
நீளும் கருத்தை ரணமாக்க
தட்டிவிடும் விசாரணையில்
அன்பின் அழுகையை நிராகரிக்கும்
பணி இலக்குகளில்
உனக்கென்ன வந்ததெனும்
குடும்ப நச்சரிப்பில்
வேறென்ன செய்வது
வேடிக்கை பார்த்து
விலகிப் போவதைத் தவிர
விபத்தின் தருணத்தில்.

—

இளையவன் சிவா,
நரசிங்காபுரம்.

---

# நீயே என் உணவு

என் உள்ளத்தின் உணர்வுகளை
உறைய வைக்க
என்னில் ஊற்றப்பட்ட
ஆண்பாலே

திரட்டி திரட்டி
திரண்டு விட்ட
வெண்ணையைப் போல
உன்னின் உணர்வுகளை
திரட்டி திரட்டி
திகட்டிப்போய்
காத்திருக்கும் என்
மெய்யை நீ
நெய்யாய்
உருக்குவது எப்பொழுது.?

கண்ணால்
கடைந்ததற்க்கே
கசிந்துருகி
பசியாறும் வேளையிலும்
உன்னை
ருசி பார்க்க நினைக்கும்
என் உதடுகள் சுவைத்தது
உணவை அல்ல
உன் நினைவை

கனவிலும்
கூட
கமழ்ந்தது
நெய்யின் மணமில்லை
உன்
மெய்யின் மணம்

இப்படியெல்லாம்
மெய் மறந்து போன பின்
மெய்யை
மறைத்தென்ன
மறித்தென்ன
இதற்கு மருந்து தான் என்ன.?

மடை திறந்த ஊற்றாய்

பொங்கிப்பெருகி
உயிர்த்தேன் பருகி
உடல்தனில்
உறவாடி
விழிநாடி கண்ணீராய்
வழிந்தோடி
உயிர்நாடி

உண்ணீரில்
உணர்வுகள் ஊறி
உச்சம்தொட்டு
உயிர்மெய்
உடைபடட்டும்
உயிரணுக்கள் கலக்கட்டும்
உறவணுக்கள் பிறக்கட்டும்

—

*G. சூர்யகலா சரவணன், B.E.,*
கண்டிதம்பேட்டை.



---

## வேண்டாம் தற்கொலை!

விழுந்தாலும் எழுந்து ஓடு நதியாக!
புதைத்தாலும் மண்ணை முட்டி
முலைத்துவிடு விதையாக!

காற்றை இங்கு கைதுசெய்தவன்
யாருமில்லை!
கண்ட கனவு நோக்கி ஓட துணிந்தால்
தூரம் இல்லை!

வென்றவனின் கதை முழுக்க
தோல்விகளே!
தோற்றவனின் கதை முழுக்க
பாடங்களை!

தற்கொலைகள் எதற்கும் இங்கு தீர்வு
இல்லை!
தீர்வை நோக்கி துணிந்த உனக்கு பயமும்
இல்லை!

யாருக்கும் இங்கு எளிதில் எதுவும்
கிடைப்பதில்லை!
எளிதில் கிடைக்கும் எதுவும்
அவ்வளவாக ருசிப்பதில்லை!

வாழ்க்கை என்பது போராட்டம் தான்!
அதை வாழ்ந்து காட்டிடு துணிவோடு
தான்!

வேண்டாம் தற்கொலை எண்ணங்களே!
தற்கொலை எதற்கு தீர்வு இல்லை!

—

*ரம்யா தங்கதுரை*

# துளிப்பாக்கள்

மண்டிக்கிடக்கும் நினைவுகளை
தூர் வாருகிறது
பாழடைந்த கிணறு

சுயநல மனிதர்கள்
கதைக் கட்டுகிறார்கள்
காக்கையும் நரியும் திருடர்கள்

நதியின் சலசலப்பை
பதிவு செய்துக்கொண்டே இருக்கின்றன
கூழாங்கற்கள்

குட்டிக் குட்டி நிலாக்கள்
காய்த்து தொங்குகின்றன
பூச்சிக் கடித்த இலைகள்

சிதிலமடைந்த சிலை
நிலைநாட்டுகின்றன
பழமையின் பெருமை

வா மனிதா
ஞானம் பெறுக
விதைத்துவிட்டன பறவைகள்

கல்லெறிந்த பின்பும்
அமைதி தொடர்ந்தது
புத்தரும் ஆறும்

— பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம் | 6380704001



# பெரும் ஏமாற்றத்திற்கு

பிறகு வரும் பொய்மை சருகுகளின் நிழல்களாய் ஒப்பனை இட்டு காட்டுகிறது காலம் தாழ்த்தி கிடைக்கும் கேள்விகளுக்கான பதில்களும் வெற்று மரக்கிளையில் மேல் உதிரும் சருகுகளின் நிழல் பிம்பம்...!

-------------

யாரோ கேள்விக்கு யாரோ விடையாக போகிறார்கள் சாலையோர நிழல் தரும் மரத்திற்கு ஒப்பாக கூறும் வினாடியில் உதிரும் சருகுகளை சேகரித்து கொண்டு போய் சேர்க்கிறது பெருங்காற்று...

-------------

கோயில் கருவறையில் வேண்டியவற்றை முழுமையாக கூறி முடிக்கும் முன்னரே அடிக்கும் மணி சத்தத்தை கேட்கும் போதெல்லாம் தேர்வறைக்குள் சென்று படித்தவற்றை தாள்களில் நிரப்புவதற்குள் அடித்து விடுமோ ஒரு மணி சத்தம் என்ற ஓசை ஆழ் மனதில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.... இரண்டுமே கிடப்பில் போடப்பட்ட வழக்குகளாய்....

— ச. சத்தியபானு

# ஒரு மனித சடலத்திற்காக

தெருவெல்லாம் கிடக்கிறது
ஆயிரம் பூக்களின் சடலங்கள்

நேற்று வெட்டிய மரம்
இன்றும் பூத்திருக்கிறது
பனித்துளிகள்

கால்மேல் கால் போட்டு
தரையில் படுத்திருக்கும் பித்தன்
சாமரம் வீசும் தெருவோரச் செடிகள்

ஒரு பட்டாம்பூச்சியை நெருங்க
நானும் சுற்றுகிறேன்
பட்டாம்பூச்சியாக



வீட்டில் அடம்பிடித்த
சிறுவன்
குட்டையில் குளிக்கிறான்
ஆனந்தமாக

பூவைப் பறிக்க விடவில்லை
கவலைப்படவில்லை
வாசத்தை முகரும் சிறுவன்

கூடைப்பந்தாட்ட மைதானம்
எல்லோரும் சென்ற மாலை
தானாக கூடைக்குள் விழும் சூரியன்

—

*சா. கா. பாரதி ராஜா,*
செங்கல்பட்டு | *9944315732*

---

# சிரிப்பு

மானுட உணர்வின்
உன்னதம்
மாறாது இயற்கை
தந்த வரம்

அழகைக் கூட்டி
ஆயுளைச்
சேர்க்கும்
உதடுகள் விரிந்த
சிரிப்பே
உண்மை நாட்டும்

அனைத்தும் சொந்தமாக
சிரிப்பை அணைப்போம்

மலிவானது ஆயின் மகத்தானது.
உயர்ந்த சிரிப்பு
உன்னதம்
மறந்த சிரிப்பு மரணம்

கொஞ்சம் கொடு
தஞ்சம் புகும்
ஈர்க்கும் காந்தம்
இனிமை சேர்க்கும்

சிரிப்பில் சாதி
மதமும் இல்லை
பலப்பல வகை உண்டு

விட்டு விட்டு சிரிப்பு
விடா தொடர் சிரிப்பு
உதட்டிலும் சிரிப்பு

உரைக்கும் சிரிப்பு

உள்ளுக்குள் சிரிப்பு
சப்தம் சிரிப்பு
சிதறும் சிரிப்பு
அழுகைச் சிரிப்பு

அடக்கும் சிரிப்பு
மகிழ்ச்சி சிரிப்பு

மந்தச் சிரிப்பு
மறைத்த சிரிப்பு

வெளுத்த சிரிப்பு
விவேகச் சிரிப்பு

சந்திப்பில் சிரிப்போம்
சிந்திப்பில் நகைப்போம்
சாக்காடுகள் ஒழிய
சிரிப்பு சிறக்கட்டும் நண்பர்களே...

—

கவிஞர். விண்மீன்,
சென்னை.

---

# இந்த பூக்கள் மட்டும் எப்படி?

ஒரே பூக்களில் இருந்து
நல்லது, கெட்டதுக்கு
என
இரு வாசனையை
கொடுக்க முடிகிறது?
*

அந்த வளர்பிறையைச்
சுற்றி
வரையப் பட்டிருக்கும்?
மேகக் கூட்டங்கள்
நிலாவுக்கான பின்புலத்தை
ஏதோ ஒரு வகையில்
அழுத்தமாக தான்
காட்டுகிறது...
*

சுழன்றடிக்கும்
அந்த எதிர் காற்றை
எதிர்த்து
தென்னை மரத்தின்
கீற்றுகள் அனைத்தும்
ஒற்றுமையாக தான்
போராடுகிறது,
என்னே
இத்தனைப் பெரிய வானம்
வெறும் வேடிக்கை மட்டும்
தானேப் பார்க்கிறது?
*

ஜன்னலுக்கு வெளியே
நின்று கண்ணாடியைக்
கொத்தும் பறவையொன்று
தான்
தொலைத்தக் காட்டைப்
பற்றியக் கவிதையொன்றை
எழுதி விட துடிக்கிறது.

—

இரா. மதிராஜ்,
காங்கேயம் | 9788475722

# பூவிருந்தவல்லி

சூடி வாடிய பூவை
தண்ணீரில் மிதக்க விட்டு
மீண்டும் மலர்த்தப் பார்க்கிறாள்

ரோஜாவின் சிகப்பு
செந்தமிழ்
தண்டின் பசுமை
பைந்தமிழ்
தண்ணீரின் தண்மை
தண்டமிழ்

இப்படி
கூந்தலில் சூடி பின் வாடி
மாலையில் பத்திரப்படுத்தி
தண்ணீரில் மிதவையாக்கப்படும் பூ
மறுநாள் மறுபடியும்
கூந்தலில் குடியேறும்

ஒரு ரோஜாவை இப்படியாக
மூன்று நாட்களுக்கு
ஒப்பேற்றி விடுகிறாய்
கண்ணாடியில் ஒட்டி வைத்து
மறுபடி மறுபடி
நெற்றியில் ஒட்டிக் கொள்ளும்
ஸ்டிக்கர் பொட்டாக

தண்ணீரில் மிதக்கும் பூவாக
உன்மீதான நேசத்தில்
மிதப்பதிலே நான்
மூழ்கிப் போகிறேன்

வல்லி என்றால் கொடி
கூந்தலை கொடியாக
வைத்துக்கொண்டால்
கூந்தல் பூவிருந்தவல்லி.

—

மு. ஆறுமுகவிக்னேஷ்,
சத்திரப்பட்டி,
விருதுநகர் மாவட்டம்.

---

# இலைகளெல்லாம்

உதிர்த்து கொண்டே இருக்கின்றன
சருகுகளாய் நிழல்

நாணும் கிளைகள்
பொட்டிடுகின்றனவே
ஓ! வெயிலில் சிரிக்கும் நிழலோ?

கைகொட்டிய கிளைகள்
சிரிக்கும் இலைகள்
தலைகோதிய தென்றலோ...?

அமைதியான கிளைகளில்
இரவை இரசிக்கும் பாடகன்
கூவும் குயில்...

தொட்டுப்பார்க்கிறேன்
கைகளில் விழும் முத்தம்
தொங்கும் இலைகள்

தலைகீழாய் நானும்
நிழலை இரசிக்கிறேன்
தொங்கிய விழுதுகளோடு...

குடைவிரிக்கும் கிளைகள்
அமரும் நிழல்
பசியை மறந்த உறக்கங்கள்

அருவியாய் கொட்டும்வியர்வை
அப்பாடா என்கிறேன்
தாலாட்டாய் கிளைகள்

வெயிலில் அழும் கிளைகள்
நீர்த்துளியாய் நிழல்கள்
தாகம்தீர்க்கிறது உடல்கள்

## நிலா

நிலவே முகம் காட்டு
புனைகிறேன் உனக்கொரு புதுப்பாட்டு
தினமும் காலையில் நீராட்டு
கவிகளின் வரிகளில்
உனக்கொரு பாராட்டு

இருண்ட முகத்தில் ஒளிர்கிறாய்
மழலைமுகம்காட்டி சிரிக்கிறாய்
கவியின் விரல்களில் நுழைகிறாய்
காவியமாய் இன்றும் மிளிர்கிறாய்

விண்ணில் நிற்கும்பைங்கிளியே
கவி எழுதியபொன்மொழியே
பால்போல்பொங்கும் தண்ணொளியே
ஆல்போல்நின்ற பூங்கொடியே

வானுடுத்தும் வெண்மையே
உன்னுள் நிற்கிறது பெண்மையே
வனப்பாய் தோன்றிய சகியே...!
இரவில் தோன்றும் ரதியே...!

கனவில் வரும் கன்னியே
காதல்வர்ணனை மொழியே
மேகம் சிரிக்கும் மழையே
இலயித்து நிற்கும் சிலையே

கவிதையில் ஓடும் வரியே
கண்ணில் மின்னும் ஒளியே
மண்ணில் படரும் மணியே
என்னில் உலவும் கவியே

மாலைநேரத்து மயக்கமே
இரவுகள் வெறுத்த உறக்கமே
நீண்ட தூர பயணமே
ஊனில் ஓடிய உதிரமே

பெண்ணாய் சிரிக்கும் பொன்னே
பொன்போல்குவியும்கண்ணே
விண்ணில் மலரும் மணமே
பெண்மையில் புலரும்குணமே

கண்ணால் வரைந்தேன் உன்னை
உன்னால் நின்றேன் முன்னே
இறகுகள் முளைத்தது கண்ணே
வானில் பறக்கிறேன் நிலாப்பெண்ணே

—

ஞா. முனிராஜ்

# ஐந்து திணைகள்

மழையும்
மலையும்
சார்ந்த ஊரினன்
என்
பாட்டுடைத் தலைவன்

கூடல் கண்டு
வெட்கிய
மேகங்கள்
அகில் மரங்களில்
மறைந்ததும்
இங்கே தான்.

வேலையென்று
போனவன்
ஓலையோடு
வருவானென்று
காத்திருந்ததும்
ஆடுகள் மேய்ந்து
கொண்டிருந்த
மலங்காட்டில் தான்.

அலைபேசி
அழையாபேசியாய்
மாறியதற்காய்
சண்டையிட்ட
வயல்களில்
பீட்ரூட்
போட்டிருந்தார்கள்

தவிர்த்துக்
கொண்டிருந்ததால்
தவித்துக்
கொண்டிருந்த போது
இரங்கல் பாடிய
ஏரிக் கடலைப்
போலக் காட்சியளித்தது.

இனி இல்லை
எப்போதுமே என்று
உரைத்தது
உறைக்கையில்
குறிஞ்சி திரியாமலே
பாலையானது.
நண்பகலில்
பருந்து பறந்தது.

ஐந்திணைக்கும்
ஒரே உரிப்பொருளாய்
ஆனதென் வாழ்வு!

## கரைகளற்ற பெருங்கடல்

மரங்களைக் குறைத்து
மாசுக்களை நிறைத்துக்
கொண்டே போனோம்.

உணவுச் சங்கிலிகளை
ஊடறுத்து உயிர்ச் சமன்
அழித்தோம்.

பசுங்கூட வாயுக்களால்
காற்றுக்கே மூச்சு முட்டியது

மும்மூலக்கூறு
வளிப்போர்வையை
முக்கால்வாசி
கிழித்தெறிந்ததில்

ஆயிரம் கரங்கள் நீட்டி

அணைத்த ஆதவன்
அக்னிப்பிழம்புகளாய்
ஆவேசம் காட்டினான்.

ஐவகை நிலத்திலும்
அனைத்துப்
பொழுதுகளுமே
கொடுங்கோடையாகிட

துருவத்துப் பனி உருகி
எச்சரிக்கை
செய்த போதெல்லாம்
எதேச்சதிகாரம்
செய்வதிலேயே
கவனம் கொண்டிருந்தோம்.

ஊழ்வினை உருத்து
வந்து ஊட்ட
ஊழிக்காலம் வந்தது
ஆழிப் பேரலை
விழுங்கிய நிலப்பரப்பில்

இப்போது மிச்சமிருப்பது
கரைகளற்ற பெருங்கடல்
மட்டுமே

கடலில் தோன்றிய உயிர்கள்
கடலிலேயே மாண்டு போக

விண்ணை முட்டிய
கட்டிடங்களும்
தானியங்கி எந்திரங்களும்
போர் விமானங்களும்
அணுசக்தி உலைகளும்
சிறு துகள்களாக
அங்கே மிதந்து கொண்டிருக்கலாம்.

—

அ. ஈடித் ரேனா,
கிராம நிர்வாக அலுவலர்,
புதுக்கோட்டை - 622003



## குறுங்கவிதைகள்

*1*
தீபத்தின் ஒளிச்சுடர்
தூண்டிவிட அதிகரிக்கும்
சுற்றிலும் பூச்சிகள்

*2*
மதில் சுவர்
மெல்லக் கீழிறங்குகிறது
அந்தி வெயில்

*3*
தியானமும் பிரார்த்தனைகளும்
நடந்த வண்ணமே உள்ளன
கொலைகளும்

*4*
மயானம் கடக்கையில்
முகத்தை மறைக்கிறது

*அச்சத்தின் நிழல்*

*5*
*நிலத்தின் மேல்*
*புடைத்து வெளிப்படும்*
*பெருமரத்தின் வேர்கள்*

*6*
*சந்திரனில் விண்கலம்*
*தடம் பதித்தபடி*
*இன்றும் சாதிவெறி*

*7*
*நீளும் துறட்டிக் கம்புகள்*
*நெடுவானத்திலே அகப்படவில்லை*
*நிலாப்பழம்*

*8*
*கிராமத்து ஆலமரம்*
*நிழல் தருகிறது*
*பகல்நேர வகுப்புக்கு*

*9*
*தொங்கும் செயற்கைக்கூட்டில்*
*தேடும் சிட்டுக்குருவி*
*தொலைத்த வேப்பமரக்காற்றை*

*10*
*வைத்தியசாலையில் நோயாளி*
*நாளாந்தம் பார்க்க வரும்*
*நன்றி மறக்காத புறா*

**---------**

## நேற்று போல் இன்று இல்லை

*நேற்று போல் இன்று இல்லை*
*இன்று போல் நாளை இல்லை*
*அன்று போல் என்றும் இல்லை*
*அன்று போல் வேறென்றைக்கும்*
*இருக்கப் போவதில்லை*

*பொய்த்துப்போன நாடகங்கள்*
*நீட்டி முழக்குகைகள்*
*நெஞ்சமெங்கும் அமில மழை பெய்து*
*செல்ல*
*நீர்த்துப்போன நேசத்தை*
*பிரித்துப் பிரித்து*
*ஞாபகங்கள் வாசிக்க*

*உடைந்து போன கண்ணாடித்*
*துகள்களின் காயத்தில்*
*உரசி வடிந்து*
*சிடுசிடுத்த மழை போலாகிறது*
*உள்ளத்தின் செந்நீர்த் துளிகள்*

*நேற்றைய பந்தங்கள்*
*பழைய பாசக்கயிறுகள்*
*நேரடியாக நெருடிச்செல்லும்*
*நெருப்புப் பூக்களாய்*
*உருவெடுத்து சுவாலை எழுப்ப*

*காலாவதியான நேசம் நஞ்சாகும்*
*கனன்று எரிந்து சாம்பலாகும்*
*மரண நச்சரிப்பில் மாயமாகும்*
*அந்த நேரங்களில்*
*சில பூமழை பொழிதல் போல் ஒரு சில*
*அரவணைப்புகள்*
*ஆறுதல் தருவது பேரதியசமே*
*அத்துவானக்காட்டில் ஒரு*
*அகல்விளக்காக ஒளி தரும்*

ஆம்
நேற்று போல் இன்று இல்லை
இன்று போல் நாளை இல்லை.

— Dr. ஜலீலா முஸம்மில்,
ஏறாவூர், இலங்கை.

# கவிதைக்குள் நெளியும் என் ஆழ்மனம்!!!!

யாருக்காவது
நீங்கள் முத்தமிடுவதென்று முடிவெடுத்து
விட்டால்
முதலில் ஒரு நாய்க்குட்டிக்கு
முத்தமிடுங்கள்
அது குழைந்து குழைந்து
நூறு முத்தங்களை
கொடுத்திடும்
நீங்கள் வாட்டிய படியே
அதன் பின்தொடரலாம்...
*

நேற்று என்ன
வரைந்தாய் யென்று
ஆசிரியர் கேட்க
யானையை வரைந்தேன்
யென்று சொல்ல
இன்று என்ன வரைந்து
கொண்டிருக்கிறாய் யென்று
மீண்டும் மிரட்டும் தோனியில்
ஆசிரியர் கேட்க
காட்டை வரைந்து கொண்டிருக்கிறேன்
யென்று சொல்ல
தலையை ஆட்டியபடியே தான்
வரைந்த காட்டிற்குள்
உள்நுழைகிறது
யானையும்
இன்றைய வகுப்புக்கான சூழலியல்
பாடமும்...

—
கவிஞர். ச.சக்தி,
அழகு பெருமாள் குப்பம்,
பண்ருட்டி.



மா. நிரல்யா,
சிங்கப்பூர்.

# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.